## வடக்கு மாகாணத்திற்கான உள்நாட்டு மட்ட போசாக்கு தலையீட்டு செயற்திட்டம் - 2013

வடக்கு மாகாணத்திற்கான உள்நாட்டு மட்ட போசாக்கு தலையீட்டு செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஜப்பான் சமூக அபிவிருத்தி நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 சனவரி 31 ஆம் திகதிய ரீஎவ் 097171 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.04 (சீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

நிதியளிப்பு உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் 2.04 ஆம் பிரிவின்படி, வட மாகாண சபையின் சுகாதார மற்றும் சுதேசிய வைத்திய அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. கர்ப்பிணித் தாய்மார்கள், பாலுட்டும் பெண்கள் மற்றும் ஐந்து வயதிற்கு குறைந்த சிறுவர்கள் என்பவர்களுக்கிடையான ஊட்டக்குறைவு வீதத்தை குறைத்தல் மற்றும் பேணுவதன் மூலம் இலங்கையின் வட மாகாணத்தில் இடம் பெயர்ந்த மக்களிற்கான உலக உணவு மற்றும் நிதி நெருக்கடியின் கூட்டுத் தாக்கத்தை குறைப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்ட நிதி மதிப்பீட்டு ஆவணத்தின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் ரூபா 2,731,700 (மானியம்) ஆனதுடன் ஜப்பான் சமூக அபிவிருத்தி நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 சனவரி 31 இல் தொடங்கியிருந்ததுடன் 2015 சனவரி 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

### 1.3 செயற்திட்டத்தின் நடவடிக்கைகள்

**பகுதி 1: அவசர உணவு பங்கீட்டு அட்டைகளின் விநியோகம்**

செயற்திட்டத்தின் ஆரம்ப 6 மாத காலத்தின் போது, மீளக்குடியமரும் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் தங்கியிருக்கும் குடும்பங்களுடன் வாழ்கின்றவர்களிற்காக வடக்கு மாகாணத்திலுள்ள கிராமங்களில் பின்வரும் தொகுதியினருக்கு சத்து மற்றும் புரத உணவுகளை (அரிசி மற்றும் தானியவகை) அதிகரிப்பதற்கான அவசர உணவுப் பங்கீட்டு ஏற்பாடுகள்.

i) போசாக்கு குறைந்த கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் / அல்லது போதிய நிறையில்லாதிருக்கின்றவர்கள் கர்ப்பிணிப் பெண்கள்

மற்றும்

ii) பாலூட்டும் பெண்கள் (பிரசவித்து 6 மாதங்கள் வரை)

iii) தங்கியிருக்கும் குடும்பங்களுடன் வாழ்கின்ற காயப்பட்ட கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் பெண்கள்

iv) வளர்ச்சி குன்றிய, ஆளுமை குன்றிய மற்றும் அனுபவத்தில் குறைந்த போசாக்குள்ளவர்களென வகைப்படுத்தப்பட்ட 5 வயதிற்கு குறைந்த சிறுவர்கள்

v) தங்கியிருக்கும் குடும்பங்களுடன் வாங்கின்ற காயமடைந்த சிறுவர்கள்

**பகுதி 2: இயலளவை கட்டியெழுப்பலும் சமுதாய தயார்படுத்தலும்**

செயற்திட்டத்தின் ஆரம்ப 6 மாத காலத்தின் போது:

i) கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நுண்பாக போசாக்கு குறைநிரப்புகளின் உள்வாங்குதல் என்பவற்றில் முறையான குழந்தைகள் மற்றும் இளம் பால்குடி சிறுவர்கள் மற்றும் பாதுகாப்பான செய்முறைகளை ஊக்குவிப்பதற்கான அடிப்படைப் போசாக்கு, போசாக்கு பழக்கவழக்க மாற்றங்கள் மற்றும் சமுதாய தயார்படுத்தல் என்பவற்றில் சமுக தன்னார்வலர்கள், சுகாதார தொழிலாளர்கள் மற்றும் பெண்கள் தொகுதி உறுப்பினர்கள் என்போரின் ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி.

ii) நிறையளக்கும் தூண்களிற்காக அடிப்படை உபகரணங்களை வழங்கல் (உயரம் மற்றும் நிறையை அளவிடும் உபகரணம் மற்றும் வளர்ச்சியை கண்காணிக்கும் அட்டவணை) மற்றும் சேதமடைந்த தூண்கள் மற்றும் உள்ளூர் சிகிச்சை நிலைய பகுதிகளில் சிறிய திருத்தங்கள் மற்றும் புதுப்பித்தல்களை மேற்கொள்ளல்.

iii) கலாச்சார ரீதியான முறையான பழக்கவழக்க மாற்ற தகவல் தொடர்பு பொருட்களின் அபிவிருத்தி மற்றும் அச்சிடல், மற்றும்

iv) போசாக்கினை அதிகரிப்பதற்கான சமுதாய தயார்படுத்தல்.

**பகுதி 3: சமுதாய – அடிப்படை போசாக்கு தலையீடுகள்**

பின்வரும் ஒவ்வொரு மாவட்டங்களிலும், தன்னார்வலர்கள், பொது சுகாதார தாதிமார் மற்றும்/ அல்லது உள்ளூர் சுகாதார பதவியணியினர் என்போர் ஊடான ஏற்பாடுகள்,

i) ஊட்டச்சத்துக் குறைந்த கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் பெணிகளிற்கு ஊக்கமிக்க நடத்தை மாற்றம் மற்றும் ஆலோசனை வழங்கல்,

ii) தாய்மார் மற்றும் 5 வயதிற்கு குறைந்த சிறுவர்களின் பாதுகாவலர்களிற்கான வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் ஊக்குவிப்பு.

iii) ஆபத்திலுள்ள தாய்மார் மற்றும் சிறுவர்களிற்கு குறைநிரப்பு ஊட்டல் மற்றும் வீட்டிற்கு வருகைதரல், மற்றும்

iv) உரிய போசாக்கு நடைமுறைகள் மற்றும் உடல்நல முக்கியத்துவங்கள் என்பவற்றை ஊக்குவிப்பதற்கு கர்ப்பிணி பெண்கள் மற்றும் சிறு குழந்தைகளின் தாய்மார்களிற்காக பழக்கவழக்க போக்கினை மாற்றும் அமர்வுகளை ஒழுங்கமைத்தல். அந்த அமர்வுகள் கணவன்மார், மாமியார்கள் மற்றும் வயதுவந்த பெண்பிள்ளைகள் என்பவர்களையும் இலக்கு வைப்பதாக இருக்க வேண்டும்.

**பகுதி 4: செயற்திட்ட மேற்பார்வை, கண்காணிப்பு, மதிப்பாய்வு மற்றும் பரிந்துரைத்தல்**

i) மாகாண மட்டம், மாவட்ட மற்றும் கிராம மட்டம் வரை மேற்பார்வையாளராக வருகை தருவோர் உள்ளடங்கலாக செயற்திட்ட முகாமைத்துவ பகுதிகளில் கடன் பெறுனர்களிற்கு ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பில் ஆதரவளித்தல், மற்றும்,

ii) போசாக்கு முயற்சிகளிற்கான அதிகரித்த ஆதரவு மற்றும் நீண்ட கால போசாக்கு தலையீடுகளின் நிகழ்ச்சித்திட்ட பின்பற்றுதல் என்பவற்றிற்காக மாகாணசபை மூலம் பரிந்துரைத்தல் மற்றும் வளத் தயார்படுத்தலிற்கான ஆதரவளித்தல்.

**1.4 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நொக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் செயற்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) செயற்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 150,075,990 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது

| செலவின விடயங்கள் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| **ஆக்கக் கூறு 1** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| குறைநிரப்பு உணவு பங்கீடு வழங்கல் | 138,322,437 | 95,930,089 | 234,402,526 |
| **ஆக்கக் கூறு 2** | | | |
| இயலளவைக் கட்டியெழுப்புதலும் சமுதாய தயார்ப்படுத்தலும் | 5,720,385 | 29,519,128 | 37,765,260 |
| **ஆக்கக் கூறு 3** | | | |
| சமுதாய அடிப்படை போசாக்கு தலையீடு | - | 14,673,235 | 36,697,964 |
| **ஆக்கக் கூறு 4** | | | |
| பரிந்துரைத்தல் செயற்திட்ட மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு | 6,033,168 | 2,029,486 | 8,203,421 |
| | 150,075,990 | 142,151,938 | 317,069,171 |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2013 ஆம் ஆண்டின் போது கட்டுநிதி நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் அத்திகதியில் உள்ளவாறு அக்கணக்கில் கிடைக்கக் கூடிய மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 768,531 | 97,727,032 |
| கூட்டு :- மீள்நிரப்பல்கள் | 1,164,835 | 50,182,960 |
| மீள்மதிப்பீட்டு இலாபம் | - | 2,569,613 |
| | 1,933,366 | 150,479,605 |
| கழி :- பற்றுதல்கள் | 1,929,670 | 149,996,307 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 3,696 | 483,298 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின்படி செயற்திட்டத்தால் நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின்படி கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென்பொருள்களிற்கான நிலையான சொத்துப் பதிவேடு என்பன செயற்திட்டத்தால் ரூபா 46,825,143 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பௌதீக உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்வதற்காக பேணப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ஒவ்வொரு பகுதிக்குமான வழங்கப்பட்ட உணவுப் பொருட்களின் அளவு, நுண்பாக ஆய்வுகூட பரிசோதனைகளிற்காக வழங்கப்பட்ட மாதிரிகளின் விபரங்கள் மற்றும் அவற்றின் மீதான அறிக்கைகள் மற்றும் நலனாளிகளின் பட்டியல் போன்ற அத்தகைய குறைநிரப்பு உணவுகளின் பங்கீட்டு விபரங்கள் கணக்காய்வு பரிசோதனைக்காக கிடைத்திருக்கவில்லை.

## 6. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிதி ஏற்பாடு மற்றும் உள்ளபடியான நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டில் பயன்படுத்தப் பட்ட நிதிகள் | 2013 திசெம்பர் 31 வரை திரட்டிய பாதீட்டு ஏற்பாடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில் |
| வெளிநாட்டு மானியம் | | | | | | | |
| ஜப்பான் சமூக அபிவிருத்தி நிதியம் | 2,731,700 | 300.48 | 150 | 150.07 | 272 | 2,882,447 | 317.06 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 300.48 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2,731,700, இல் ரூபா 317.06 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2,882,447 ஆன மானிய பெறுகைகள் 03 ஆண்டுகளிற்கு மேலாக செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்கிய பின்னர் பயன்படுத்தப்பட்டது என்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) தலைப்பு- 315- வடக்கு மாகாண சபை – நிகழ்ச்சித்திட்டம்- 02 அபிவிருத்தி நடவடிக்கைகள் - செயற்திட்டம் 02- மாகாண அபிவிருத்தியின் கீழ் 2013 ஆம் ஆண்டிற்காக இலங்கை அரசாங்கத்தின் வருடாந்த மதிப்பீடுகளில் செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | மூலம் | ஏற்பாடு | செலவினம் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | |
| 2011 | வெளிநாட்டு மானியங்கள் | - | 151,158,757 | -- |
| 2012 | வெளிநாட்டு மானியங்கள் | 122,493,000 | 142,151,938 | 116 % |

| | | | | |
|---|---|---|---|---|
| 2013 | வெளிநாட்டு மானியங்கள் | 150,000,000 | 150,075,990 | 100.05 % |
| | | 272,493,000 | 443,386,685 | |

உள்ளபடியான செலவினம் ஒதுக்கீட்டை விஞ்சியிருந்ததுடன் அதற்கான காரணங்கள் கணக்காய்விற்காக விளக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மானிய உடன்படிக்கையின்படி, ரூபா 300.48 மில்லியன் தொகையான மொத்த மானியங்கள் நான்கு கூறுகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 317.06 மில்லியன் செலவினம் ஏற்பட்டிருந்தது. இதன்படி, மானியத்தை விஞ்சி ரூபா 16.58 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

| | **ஆக்க்கூறு** | **ஒதுக்கப்பட்ட மானிய தொகை (இலங்கை ரூபாவில்)** | **2013.12.31 இல் உள்ளவாறான செலவினம்** | **செலவினம் விஞ்சிய / குறைய (இலங்கை ரூபாவில்)** |
|---|---|---|---|---|
| (1) | குறைநிரப்பு உணவு பங்கீட்டு அட்டைகளின் வழங்கல் | 193,748,390 | 234,402,526 | 40,654,136 |
| (2) | இயலளவை கட்டியொழுப்பல் மற்றும் சமூக தயார்படுத்தல் | 45,897,170 | 37,765,260 | (8,131,909) |
| (3) | சமூதாய அடிப்படை போசக்கு தலையீடு | 39,496,710 | 36,697,964 | (2,798,746) |
| (4) | பரிந்துரை, செயற்திட்ட மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு | 21,344,730 | 8,203,420 | (13,141,309) |
| | | 300,487,000 | 317,069,171 | 16,582,171 |

## 6.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் பிரதான நடவடிக்கை இலக்கிடப்பட்ட கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் பெண்கள் மற்றும் 5 வயதிற்கு குறைந்த குழந்தைகள்

என்போருக்காக உணவு வழங்குவதாக (ஜீவபோசா) உள்ளது. அவற்றின் மீதான பௌதீக முன்னேற்றம் கீழே தரப்படுகின்றன.

| **வகுதி** | **குறைநிரப்பு உணவு ஏற்பாட்டிற்காக இலக்கிடப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை** | **குறைநிரப்பு உணவு வழங்கப்பட்ட உள்ளபடியான நலனாளிகளின் எண்ணிக்கை** | **சதவீதம்** |
|---|---|---|---|
| கர்ப்பிணி பெண்கள் | 9,000 | 6,084 | 67 |
| பாலூட்டும் பெண்கள் | 5,000 | 5,404 | 108 |
| குழந்தைகள் | 1,000 | 5,168 | 516 |
| சிறுவர்கள் | 11,000 | 11,478 | 104 |
| | 26,000 | 28,134 | |

எவ்வாறாயினும், உணவு 2-5 ஆண்டுகள் வயது வீச்செல்லையான சிறுவர்களிற்கு வழங்கப்பட்டிருக்காததுடன் அவ் வயதுக் தொகுதியின் அத்தகைய சக்துக் குறைவு வீதம் செயற்திட்டத்தின் நோக்கங்களின் கீழ் எதிர்பார்க்கப்பட்டவாறு குறைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உணவு வழங்கல் தனியார் கம்பனி ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன்படி உலக வங்கிக் குழுவால் சிபார்சு செய்யப்பட்டவாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கள உத்தியோகத்தர்களின் ஈடுபாடு வினைத்திறனுடன் இருக்கவில்லை.

(இ) ஜீவபோச மாதிரிகளின் ஆய்வுகூட பரிசோதித்தலிலுள்ள தாமதங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. ஆகவே, அத்தகைய விடயங்கள் மாதிரிகளின் பரிசோதிப்பு இல்லாமல் விநியொகிக்கப்பட்டிருந்தன. செயலாளர் இது தொடர்பில், காலாவதியாகும் திகதிக்கு கிட்டவுள்ள களஞ்சியத்திலுள்ள இருப்புக்களிற்கு எதிராக பல சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், அவற்றின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நடைமுறைகள் தொடர்பாக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களால் முறைப்பாடுகள் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். மேலும், ஜீவபோசாவின் காலாவதியான இருப்புக்கள் பல சந்தர்ப்பங்களில் கண்டுபிடிக்கப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் என்பவற்றின் அறிக்கைகளின் பிரகாரம், சில மாதிரிகள்

நுண்ணுயிரியல் பரிசோதனையில் தவறியிருந்தது. ஆகவே, உணவு விநியோகிப்பதற்கு முன்னர் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) யாழ்ப்பாண மாவட்டத்தில் குறைநிரப்பு உணவு வழங்கலினை சமுதாய பங்குபற்றலின் விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(உ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் 60 சதவீத காலம் கடந்திருந்த போதிலும் ஐ.அ.டொலர் 188,245 ஆன ஒதுக்கப்பட்ட தொகைக்கான மாவட்ட மற்றும் எம்ஓஎச் மட்டத்தில் உணவு கூட்டுப் பொருள் பயிற்சி, சமுதாய ஆதரவளிப்பு மற்றும் உணர்வூட்டல் கூட்டங்கள், வைத்தியசாலை பதவியணியினர் மற்றும் அபிவிருத்தி தொடர்பாடல் நிபுணர் பயிற்சி போன்றவை உள்ளடங்கலான செயற்திட்டத்தின் ஒன்பது நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. செயலாளர் இது தொடர்பில், உணவு வழங்கலானது மூலப்பொருள் உணவு விடயங்களிற்கு எதிராக கலவையாக செய்யப்பட்டிருந்தது. அதன்படி அங்கு எவ்வித பயிற்சியும் வழங்குவதற்கான தேவை இருக்கவில்லை மேலும், அபிவிருத்தி தொடர்பால் நிபுணர் மற்றும் போசாக்கு ஆலோசகர் நிபுணர்கள் செல்லமுடியாமை காரணமாக செய்ய முடியாதிருந்தது என குறிப்பிட்டிருந்தார்.

## 6.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

2012 ஆம் ஆண்டின் போது ரூபா 6,645,532 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 180 எண்ணிக்கையான வயதுவந்தோருக்கான மற்றும் குழந்தைகளிற்கான உயரம் மற்றும் நிறை அளவை தராசுகள் போன்ற உபகரணங்கள் அத்தகைய உபகரணங்களை பயன்படுத்தவற்கு முறையான அறிவுறுத்தல்கள் கிடைக்காமை மற்றும் அலுவலக பதவியணியினர் அத்தகைய உபகரணங்களை இயக்குவதற்கான பழக்கமின்மை போன்ற பல காரணங்களால் எம்ஓஎச் பிரிவால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கொள்வனவுகள்